[1992 ஜனவரி 30

பெரிய கோடீஸ்வரன் ஆகிறான். சாதாரண பிச்சாதிபதி, லட்சாதிபதி ஆகிறான். கடந்த மாதம் பார்க்கின்றபோது சாதாரணமாக இருந்த சாதாரண தொண்டன் கோடீஸ்வரன் ஆகிறான். இதற்கு எல்லாம் இன்கம் டாக்ஸ், கமர்சியல் டாக்ஸ் போன்ற துறைகள் இல்லையா? இதற்கு எல்லாம் சர்க்கார் இருக்கிறது. இதைக் கண்காணித்து அவர்கள்மீது என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும்? சாதாரண சட்டமன்ற உறுப்பினர் ஏதாவது ஒரு சின்ன குறை செய்துவிட்டால் வாரப் பத்திரிகைகள் எல்லாம் கடுமையான விமர்சனம் செய்து, கொள்ளையடித்துவிட்டார்கள். கோடீஸ்வரர்களாகிவிட்டார்கள் என்று எல்லாம் எழுதுகின்ற இந்தக் காலத்தில் இதை எல்லாம் வாரப் பத்திரிகைகள் எழுதி அரசுக்குச் சுட்டிக்காட்டலாம். அதே நேரத்தில் தமிழகத்தையே சீட்டிங் செய்த கும்பலை சூட்டிங் செய்து சிட்டிங்கில் அமர்ந்து இருக்கிற புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியிலே (மேசையைத் தட்டும் ஒலி) ஏன் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கக் கூடாது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற போலி சீட்டுக் கம்பெனிகள்—முறைகேடுகள்மீது—நடவடிக்கை எடுப்பது பற்றி முழு தகவல் இல்லை. இதுவரையில் 'சீட்டு விஜிலன்ஸ் செல்' மூலமாக 3¼ கோடி ரூபாய் மதிப்புள்ள பதிவுறாச் சீட்டுகளைக் கண்டுபிடித்து அவர்கள்மீது நீதிமன்றத்தில் இன்றைக்கு வழக்கு தொடரப்பட்டு தண்டனை பெற இருக்கிறது. 3 1/4 கோடி ரூபாய் பெறுமான அளவுக்கு முறைகேடுகள் கண்டுபிடிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பெற்றிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 3. திரு. வே. தம்புசாமி, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

3—

சீவளூர் நகரத்தில் பத்திரப் பதிவு அலுவலகம்.

* 786—திரு. வே. தம்புசாமி :

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருவாரூர் வட்டம், சீவளூர் நகரத்தில் பத்திரப் பதிவு அலுவலகம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

1992 ஜனவரி 30]

(ஆ) ஆம் எனில், எப்போது திறக்கப்படும்?

முற்பகல் 9-55

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீவளூர் நகசம் என்பது நாகையிலிருந்து 18 கிலோ மீட்டர் தூரத்திலும், திருவாரூரிலிருந்து 20 கிலோ மீட்டர் தூரத்திலும் அமைந்திருக்கக்கூடிய பகுதியாகும். அதைப்போல வடக்குப் புறத்தை எடுத்துக்கொண்டால் 18 கிலோ மீட்டர் தூரத்திற்கும், தென்புறத்தை எடுத்துக்கொண்டால் 25 கிலோ மீட்டர் தூரத்திற்கும் மையமாக அமைந்திருக்கக்கூடிய பகுதியாகும். அந்தப் பகுதியில் இருக்கிறவர்கள் பத்திரப் பதிவு செய்ய வேண்டுமென்றால் திருவாரூர் நோக்கி 30 கிலோ மீட்டர் தூரம் செல்ல வேண்டிய நிலைமை இருக்கிறது. ஆகவே இதைக் கருத்திற்கொண்டு அந்த நகரத்தில் பத்திரப் பதிவு அலுவலகம் ஒன்றைத் திறக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்திரப் பதிவு அலுவலகம் திறக்க வேண்டுமென்றால் ஆண்டுக்கு குறைந்தது 2,000 ஆவணங்கள் பதிவு செய்ய வேண்டும். கீவளூரைப் பொறுத்த வரையிலும் அருகாமையில் உள்ள ஊர்களையும் சேர்த்து நடப்பு ஆண்டிலும், சென்ற ஆண்டிலும் புள்ளிவிவரப்படி 2000 வர வில்லை. ஆகையால் இப்போது கீவளூரில் சார் பதிவு அலுவலகம் திறக்க வாய்ப்பு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியபடி கீவளூர் என்பது 30 கிலோ மீட்டர் அல்லது 20 கிலோமீட்டர் தூரத்தில் இல்லை. அந்த இடம் நாகப்பட்டினத் திலிருந்து 13 கிலோ மீட்டர் தூரத்திலும், திருவாரூரிலிருந்து

12 கிலோ மீட்டர் தூரத்திலும்தான் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அங்கே குறைந்தபட்ச பத்திரப் பதிவு வரவில்லை என்று சொல்லலாம். ஆனால் அது ஒரே வருடத்தில் ஆகக்கூடியதல்ல. தொடர்ந்து பல வருடங்களில் கூடும், குறையும். அந்த வகையிலே, அந்தப் பகுதி மையமாக அமைந்துள்ளதால், எதிர்காலத்திலாவது அரசு அது பற்றி பரிசீலித்து அதை அமைப்பதற்கு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்காலத்தில் அதுபற்றி ஆய்வு செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 4, திரு. மு. நடேசன், திரு. க. அர்ச்சுனன், திருமதி க. பழனியம்மாள், திரு கா. கந்தசாமி, திரு. ம. சின்னசாமி—மாண்புமிகு கல்வி அமைச்சர்.

4—

சேலம் மாவட்டத்தில் பல்கலைக்கழகம்.

* 1359—**திரு. மு. நடேசன்:**

திரு. க. அர்ச்சுனன்:

திருமதி க. பழனியம்மாள்:

திரு. கா. கந்தசாமி:

திரு. ம. சின்னசாமி:

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

சேலம் மாவட்டத்தில் பல்கலைக்கழகம் அமைக்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. இராம வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.